**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ESTABLISHMENT OF ROUGH STONE QUARRY OWNED BY M/S. ROYAL STONES, IN AN EXTENT OF 1.00.0 HA AT SF.NO.1/7 (PART- 7) & THIRU.P.SIVAKUMAR IN AN EXTENT OF 1.00.0 HA AT SF.NO.1/7 (PART- 11) OF PANAMARATHUPATTI VILLAGE, SALEM TALUK, SALEM DISTRICT ON 05.02.2025 AT 11.00 A.M. IN M/S. SRI VIJAY MAHAL THIRUMANA MANDAPAM, NH-44, SERVICE ROAD, GAJJALNAICKENPATTI VILLAGE, SALEM TALUK, SALEM DISTRICT.**

1. **Tmt. A. Abinaya** : **Revenue Divisional Officer, Salem Revenue Division.**

2. **Tmt. A. Nithyalakshmi** : **District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Salem.**

A total of 123 Nos. of Project representatives, Government staff and public were participated (Attendance register is enclosed herewith)

**District Environmental Engineer, Salem**

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem welcomed the Revenue Divisional Officer, Salem, other Government Officials, Public, Social & Environmental activists for the Public Hearing and informed that the M/s. Royal Stones, and Thiru. P. Sivakumar has obtained mining approval from the Mining and Geology Department and then applied for Environmental Clearance for their proposed project to State Level Environment Impact Assessment Authority, TamilNadu (SEIAA-TN). In this regard, SEIAA has issued Terms of Reference (TOR), with a condition that a Public Hearing has to be conducted so as to address the concerns raised by the public. Based on that, a public hearing was proposed on 05.02.2025 after getting approval from the District Collector, Salem

District and as mandated public notice has been published in the newspaper namely "New Indian Express" (English) & "Dhinathanthi (Tamil)" on 31.12.2024.

The Project Proponent will make power point presentation about the said proposed project. After that the public were requested to express their views, concerns and questions if any by indicating their name and village name from where he /she belongs to and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be recorded and sent to the SEIAA-TN.

On behalf of the Project Proponent, Environmental Consultant has explained about the proposed project through power point presentation.

In continuation to that, the public started to express their views, opinions, concerns, questions and the clarification from the project proponent as detailed below.

**1. Thiru. Bhoopathi, Panamarathupatti Village**

I would like to express my gratitude to the government officials and the general public who have attended the public hearing of the Tamil Nadu Pollution Control Board, Salem District. If the government permission is granted for the ordinary stone quarry to be set up in Panamarathupatti Village, Salem Taluk, Salem District, it will provide employment opportunities to about 50 families in the surrounding area. At the same time, their livelihood will increase, It is my opinion. Therefore, I support this. I would like to thank the government officials and the general public for giving me the opportunity to speak in this meeting.

**2. Thiru. Ramesh Panamarathupatti Town Panchayat 9th Ward**

I would like to express my gratitude to the Pollution Control Board Officer, the Revenue Divisional Officer and everyone here. Just as we educate our children to eliminate the poverty of our family, similarly, to eliminate the poverty of the country, if we extract the minerals in the country and use them, the poverty of our country will be eliminated. Therefore, by helping the government to extract minerals, we will also create the wealth of our country and increase its wealth.

**3. Thiru. Satish, Secretary, Environment Protection**

My name is Satish. My name is Satish. I am a petitioner to this assembly as an environment protection secretary Greetings to everyone who has come to the stage. I respect your customs and cultural details I agree with your opinions and legitimate problems. The government should adopt this village to solve your problems immediately and release more funds for sustainable development. New era employment opportunities should be arranged immediately. I humbly request the high-ranking government officials to provide permanent houses to the people nearby. This village should be environmentally green and I request as the environment protection secretary. I also request this owner to plant trees. Grow trees and save them. The Royal Stones and Sivakumar quarries shall be granted with environmental clearance without imposing any restrictions and I also humbly request the high-ranking government officials. Thank you.

**4. Thiru. Ravi Panamarathupatti village**

I am from Panamarathupatti, I am illiterate. We will survive only if we have this quarry. Please give us permission for this. We will have to go far to other places. There is nothing else expect this. If this existed, we would Survive from this quarry.

**5. Thiru. Arumugam, Panamarathupatti village**

Greetings to the officials, this quarry will benefit 10 families. Now we are facing financial problems due to lack of employment. We are not getting any job opportunities. So, if this quarry comes, we will get a job opportunity.Now we have rented vehicle, we have to go far in the vehicle and bring Gravel, M- sand, etc., if it is stay here, the diesel mileage will be more and it gives more support our drivers also get more support.We are expecting that this quarry will bring great benefits to as.

**6. Thiru. Kandasamy, Gandhi Nagar, Panamarathupatti Village**

Thank you this quarry. We are working as driver and family also gets employment opportunity. Thank you very much for giving this quarry.

**Conclusion:**

The Revenue Divisional Officer, Salem has requested the public to express of their views if any.

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem informed that the views, suggestions and queries of the public are recorded and the same will be sent to the State Environment Impact Assessment Authority of TamilNadu - Chennai. If there are any petitions from the public that would be enclosed along with that. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem has concluded the meeting and thanked the public gathered with which the public hearing came to an end.

The list of participants, audio and video recording, 22 Nos of representations received during meeting in original with photographs of the public hearing meeting are enclosed herewith.

Attendance of the public and recordings made in CD / Pen drive are enclosed.

A. N...

**District Environmental Engineer**
**TamilNadu Pollution Control Board**
**Salem**

05/02/23

**Revenue Divisional Officer**
**Salem**

**சேலம் மாவட்டம், சேலம் வட்டம், பனமரத்துப்பட்டி கிராமம், புல.எண்.1/7 (பகுதி–7)ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ராயல் ஸ்டோன்ஸ் மற்றும் புல.எண்.1/7 (பகுதி–11)ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.P. சிவக்குமார் ரப் ஸ்டோன் குவாரி ஆகிய குவாரிகளின் உத்தேசிக்கப்பட்ட திட்டத்திற்கு 05.02.2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் சேலம் மாவட்டம், சேலம் வட்டம், கெஜ்ஜல் நாயக்கன்பட்டி கிராமம், தேசிய நெடுஞ்சாலை எண்–44, சர்வீஸ் ரோடில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ விஜய் மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்.**

சேலம் மாவட்டம்.**முன்னிலை :-**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி.அ.அபிநயா | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சேலம். |
| 2. | திருமதி.ஆ.நித்யலட்சுமி | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>சேலம். |

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொது மக்களின் எண்ணிக்கை–123 ஆகும். (வருகைப் பதிவேட்டின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

அனைவருக்கும் எனது இனிய காலை வணக்கம், தி/ள். ராயல் ஸ்டோன்ஸ் மற்றும் திரு.P.சிவக்குமார் அவர்கள் சுரங்கப்பணிகள் செய்து கற்களை எடுக்க வேண்டி சுற்றுச்சூழல் அனுமதிக்காக நடைபெறவுள்ள பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள நமது வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும், இங்கு கூடியிருக்கும் அனைத்து அதிகாரிகள், அலுவலர்கள், திட்ட முனைவோர், ஆலோசகர் மற்றும் இங்கு கூடியிருக்கும் பொதுமக்கள் அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தை தெரிவித்து கொண்டு அனைவரையும் இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வரவேற்கிறேன். தி/ள். ராயல் ஸ்டோன்ஸ் மற்றும் திரு.P. சிவக்குமார் அவர்கள் சுரங்கப்பணி செய்வதற்காக புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்களிடம் MINING APPROVAL என்ற ஒரு முன் அனுமதியை பெற்று பின்னர் சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு விண்ணப்பித்ததின் பேரில் அவர்களிடமிருந்து TOR (TERMS OF REFERENCE) என்ற ஓர் வரைவறிக்கை பெறப்பட்டு அதில்

பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தினை நடத்தி கொடுக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை கேட்டு கொண்டதற்கிணங்க இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் சம்மந்தமான அறிவிப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஒப்புதலின் பேரில் **31.12.2024ம் தேதியன்று** தமிழ் நாளிதழ் தினத்தந்தி மற்றும் ஆங்கில நாளிதழ் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்–ல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு ஒலிபெருக்கியின் மூலம் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தை குறித்து அவர்களின் ஆலோசகர் அவர்கள் எடுத்துரைப்பார்கள். பின்னர் பொதுமக்களாகிய தாங்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்கள், கருத்துக்கள் ஏதும் இருப்பின் இம்மேடைக்கு அருகே வந்து இங்குள்ள ஒலிவாங்கியின் மூலம் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. கருத்துக்களை பதிவுசெய்யும் முன்னர் தங்களுடைய பெயர் மற்றும் ஊரின் பெயரை தெளிவாக தெரிவித்துவிட்டு கருத்துக்களை பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் இந்நிகழ்வுகள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு, எழுத்து பதிவும் செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும் என்பது தங்களுக்கு தெரிவித்து கொள்ளப்படுகிறது. தற்பொழுது அவர்களின் ஆலோசகர் அவர்கள் இத்திட்டத்தை குறித்து விரிவாக எடுத்துரைப்பார்.

**திட்ட ஆலோசகர்**

இத்திட்டம் குறித்து விளக்கங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் திட்ட ஆலோசகர் அவர்கள் விவரித்தார்.

அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள், கேள்விகள் ஆகியவற்றிற்கு திட்ட ஆலோசகர் அவர்கள் அளித்த விளக்கங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சேலம்**

தற்பொழுது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**1. திரு.பூபதி, பனமரத்துப்பட்டி கிராமம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம் மாவட்டம் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் அரசு அதிகாரிகளுக்கும், பொது மக்களுக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக்கெண்டு. சேலம் மாவட்டம், சேலம் வட்டம், பனமரத்துப்பட்டி கிராமத்தில் அமையவுள்ள சாதாரண கல் குவாரிக்கு அரசு அனுமதி கிடைத்தால் இந்த சுற்று வட்டார பகுதியில் உள்ள சுமார் ஒரு 50 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதே சமயம் அவங்களுடைய வாழ்வாதாரம் உயரும் என்பது என்னுடைய கருத்தாகும். ஆகவே இதை நான் ஆதரிக்கிறேன். எனக்கு இந்த கூட்டத்தின் வாயிலாக பேச வாய்ப்பளித்த அரசு அதிகாரிகளுக்கும், பொது மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கெள்கிறேன்.

**2. திரு.ரமேஷ், பனமரத்துப்பட்டி பேரூராட்சி 9வது வார்டு**

மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரி அவர்களுக்கும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும் மற்றும் இங்கே அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். நமது குடும்பத்தின் வருமையை போக்க நமது குழந்தைகளை எவ்வாறு படிக்க வைக்கிறோமோ, அது போல நாட்டின் வருமையை போக்க, நாட்டிலுள்ள கனிமங்களை எடுத்து அதை பயன்படுத்தினால் நமது நாட்டினுடைய வருமை நீங்கும். அதனால் கனிமங்களை எடுக்க அரசுக்கு உதவியோடு நம் நாட்டின் வளத்தையும் பெருக்குவோம் செல்வாக்கை உருவாக்குவோம். நன்றி.

**3. திரு.சதீஷ்,** சுற்றுச்சூழல் காப்பாற்று செயலா**ளர்**

என் பெயர் சதீஷ். நான் ஒரு சூழியல் காப்பாற்று செயலாளராக மனுதாரராக இந்த சபைக்கு வணக்கம். மேடைக்கு வந்த அனைவருக்கும் வணக்கம். உங்கள்

ஆச்சார விவரங்களை கலாச்சாரம் சம்பரதாயங்களை காப்பாற்றி கொண்டு உங்கள் மனோ பாவங்களை மதிக்கிறேன். உங்கள் அபிப்பிராயங்களுடன் நியாயமான பிரச்சனைகளை ஒப்புக் கொண்டு உங்களுடன் ஒரு மனதாக ஒப்பு கொள்கிறேன். உங்கள் பிரச்சனைகளை உடனடியாக தீர்த்து வைக்கும்படி அரசாங்கம் இந்த ஊரினை தத்து எடுத்துக் கொண்டு நிலையான வளர்ச்சி உருவாவதற்கு அதிகமான நிதியை உடனே வெளியிட வேண்டும். உத்தியோகம் வேலை வாய்ப்பினை உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். அருகில் உள்ளவர்களுக்கு நிரந்தர வீடுகள் கொடுக்க வேண்டுமென்று அரசாங்க உயர்நிலை அதிகாரிகளுக்கு மிகுந்த தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஊர் சூழியல் மற்றும் பசுமையுடன் நிலையாக இருக்க வேண்டும் என்றும் சூழியல் காப்பாற்று செயலாளராக கூறுகிறோம். இந்த உரிமையாளர் அவர்களுக்கும் மரங்கள் வளர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மரங்கள் வளருங்கள், அவற்றை காப்பாற்றுங்கள் இங்கு தி/ள். ராயல் ஸ்டோன்ஸ் சிவக்குமார் சார் இந்த உரிமையாளர் அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாட்டையும் விதிக்காமல் சூழியல் அனுமதியை உடனடியாக கொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க உயர்நிலை அதிகாரி அவர்களுக்கும் மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம். தேங்க் யூ.

**4. திரு. ரவி, பனமரத்துப்பட்டி கிராமம்**

எல்லாத்துக்கும் வணக்கம்ங்க. நான் பனமரத்துப்பட்டி, எனக்கு படிப்பறிவில்லைங்க. இந்த குவாரி இருந்தால் தான் பிளைப்பு நடத்துவோம். இதுக்கு அனுமதி குடுங்க எங்களுக்கு. வேறு இடங்களுக்கு ரொம்ப தூரமா போகனும்ங்க. இது தவித்து எங்களுக்கு வேற எதுவுமே இல்லைங்க. இது இருந்தா இத வெச்சி நாங்க பொளைச்சிக்குவோம்ங்க.

**5. திரு.ஆறுமுகம், பனமரத்துப்பட்டி கிராமம்**

அதிகாரிகளுக்கு வணக்கம் இந்த கல் குவாரி வருவதினால் பாத்திங்கனா ஒரு 10 வீட்டு குடும்பத்திற்கு நன்மை நடக்கும்ங்க. இப்ப எங்களுக்கு தொழில் வந்து

ரொம்ப பாதிப்பா இருக்குங்க. வேலை வாய்ப்புலாம் கிடைக்க மாட்டங்குதுங்க. இதனால என்னன்னா இந்த கல் குவாரி வர்றதனால ஒரு வேலை வாய்ப்பு கிடைக்கும்ங்க. இப்ப நாங்க வண்டி வெச்சிருக்கறோம், வண்டியில தூரமா போயி ஜல்லி, எம்.சேண்டு, எல்லா எடுத்துட்டு வரங்க, இங்க பக்கமா இருந்துச்சின்னா டீசல் மைலேஜ்ல இருந்து எல்லாமே ஒரு சப்போர்ட்டா இருக்குங்க. இல்ல எங்ககிட்ட வேலை செய்யுர டிரைவரா இருக்கட்டு, எல்லாத்துக்குமே ஒரு சப்போர்ட்டா இருக்குங்க. இந்த கல் குவாரி வர்றதுனால மிக்க நன்மை நன்றி இருக்கும்னு சொல்லி எதிர்பாக்கறங்க. அதிகாரிகளுக்கு வணக்கம்.

**6. திரு. கந்தசாமி, காந்தி நகர், பனமரத்துப்பட்டி கிராமம்**

இந்த கல் குவாரி வர்றதுனால மிக நன்றிங்க. இந்த மாதிரி நாங்கள்ல டிரைவர் வேலை பாக்குறாங்க. குடும்பத்துக்கு நிறைய வேலை கிடைக்குங்க. இதனால் இந்த கல் கவாரி குடுக்கறதுனால மிக நன்றிங்க.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சேலம்**

வேறு எதாவது கருத்துக்கள் சொல்லனுங்களா?

**வருவாய் கோட்டாட்சியர், சேலம்**

வேற யாருக்கு எதுவும் கருத்து இல்லைங்களா? எல்லாருக்கும் சம்மதம், முடிச்சிடலாமா? நன்றி!

இறுதியாக **மாவட்ட** சுற்றுச்சூழல் பொறியாளர், அவர்கள் கருத்து கேட்பு கூட்டம் அமைதியா நடத்த ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது ந்ன்றியை தெரிவித்து கௌ்கிறேன் என்று கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

மேலும் சேலம் மாவட்டம் சேலம் வட்டம், பனமரத்துப்பட்டி கிராமத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/எ். ராயல் ஸ்டோன்ஸ் மற்றும் திரு.P. சிவக்குமார் ரப் ஸ்டோன் குவாரி ஆகிய சாதாரண கல் குவாரி திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக 22 மனுக்கள் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் பெறப்பட்டது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப்பதிவேடு மற்றும் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த ஒலி / ஒளிப்பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய குறும்பதிவி (Pendrive) ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
சேலம்

05/02/24
வருவாய் கோட்டாட்சியர்,
சேலம்